# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 70 — 1973 ජූලි 27 වැනි සිකුරාදා — 1973.07.27

70 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூலை மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 291 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | 293 | வரவு செலவுத் திரட்டுகள் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 296 | ஆதன விற்பனைகள் | — |
| துணை விதிகள் | 296 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் | 297 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

அவிசாவலை நகர சபை

பகிரங்க அரங்காட்டுக்கள் கட்டளைச்சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுக்கள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 09 ந் உ.

விதி

1965 திசெம்பர் 17 ந் தேதிய 14,587 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டனவுமான (176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுக்கள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1919 ஏப்பிறல் 4 ந் தேதிய 7,004 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டனவுமான விதிகள், அவிசாவலை நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்ட வரையில் அவற்றின் அ3 என்னும் விதியில் காட்டப்பட்டிருக்கும் கட்டண வீதத் திட்டத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய கட்டண வீதத் திட்டத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

| | ஒரு நாளைக்கு ரூ. ச. | ஒரு மாதத்திற்கு ரூ. ச. | டிசெம்பர் 31 உடன் முடிவடையும் ஒரு வருடத்திற்கு ரூ. ச. |
|---|---|---|---|
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | 3 0 | 50 0 | 450 0 |
| 199 பேருக்கு மேற்படும், ஆனால் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | 5 0 | 75 0 | 750 0 |
| 399 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | 10 0 | 100 0 | 900 0 |

7–996—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**கொழும்பு,**
**1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.**

## இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டத்தின் 22 ம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகார தாபனத்தால், அதாவது பண்டத்தரிப்பு பட்டணத்தால் ஆக்கப்பட்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அப்பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள்.

அரசாங்க நிர்வாகம் உள்ளூராட்சி உள்நாட்டு
கொழும்பு, அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்.
1973 ம் ஆண்டு ஜுலை மீ 11 ந உ.

### ஒழுங்குவிதிகள்

1. இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசித்தப்படுத்தப்பட்ட பொதுக் கொல்களம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அவரால் அதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட பொது சௌக்கியப் பரிசோதகர் எவரதும் பொறுப்பில் இருக்கும். அவ்வுத்தியோகத்தரே அக்கொல்களத்தினுள் ஒழுங்காற்றுக்கும் சுகாதாரத்திற்கும் பொறுப்பாளியாவார்.

2. (1) எவரேனும் கொல்களத்தில் எவ்விலங்கையும்—

(அ) அவ்விலங்கு சௌக்கிய வைத்திய உத்தியோகத்தராலேயும் அதன் பொருட்டு விசேட ஆணையாளரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தராலேயும், பரிசோதிக்கப்பட்டு மனித உணவுக்காக கொல்லுவதற்கு ஏற்றதென்று அவ்வுத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, அல்லது

(ஆ) எத்தினத்திலேனும் காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையேயன்றி கொல்லக்கூடாது, எனினும் விசேட ஆணையாளர் விசேடமான சூழ்நிலைகளில், இதில் சொல்லப்பட்டதல்லாத வேறு எவ்வேளையிலேனும் எவ்விலங்கையும் கொல்ல அதிகாரம் அளிக்கலாம்.

(2) எவரேனும் அக்கொல்களத்தில், எந்த விலங்கையும்—

(அ) பந்தி 1 ன் கீழ் அவ்விலங்கு அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 30 மணித்தியால நேரம் கழிந்த பின்னர் எந்தநேரத்திலும் அல்லது

(ஆ) அது பந்தி 1 ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொலைகளத்திலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டிருப்பின் மீண்டும் அது பரிசோதிக்கப்பட்டு, மனித உணவுக்காக கொல்லுவதற்கு ஏற்றதென் அப்பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டாலன்றி கொல்லக்கூடாது.

3. கொல்கள வளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஆள் ஒவ்வொருவரும் அவ்விலங்கு அவ்வளவில் நிற்கையில் அதற்குப் போதிய ஆகாரமும் நீரும் ஊட்டப்படுவதற்கு வேண்டிய சகல ஏற்பாட்டையும் செய்தல் வேண்டும்.

4. கொல்கள வளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அவ்விலங்கு கொல்லுவதற்கு தகுதியற்றதென்றும் நிராகரிக்கப்பட்டால், அவ்விதம் நிராகரிக்கப்பட்டவுடனேயே அவ்விலங்கை அவ்வளவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அப்புறப்படுத்துவிக்க வேண்டும்.

5. இரண்டாம் ஒழுங்கு விதியில் சொல்லப்பட்ட உத்தியோகத்தர் எவரும் எவ்விலங்கையும், அது அவ்வொழுங்கு விதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுள்ளதாக அல்லது மனித உணவுக்குக் கொல்லுதற்குத் தகுதியற்றதாகக் கண்டால் அது கொல்லப்படுவதைத் தடை செய்யலாம்.

6. கொல்களத்தில் கொல்லப்பட்ட எவ்விலங்கினதும் இறைச்சி அல்லது கழிவிறைச்சி நோயுள்ளது என அல்லது மனித உணவுக்குத் தகுதியற்றதென்று 2 ம் ஒழுங்கு விதியில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரும் அபிப்பிராயப்படுவாரேல் அவர் அவ்விறைச்சியை அல்லது கழிவு இறைச்சியை உடனே அழித்துவிடும்படி அல்லது அந்த இறைச்சி அல்லது கழிவிறைச்சி விற்பதற்கு வைக்கப்படுவதனை அல்லது மனித உணவுக்கென உபயோகிக்கப்படுவதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் ஒழித்துவிடச் செய்யவேண்டும்.

7. கொல்களத்தின் பொறுப்பு உத்தியோகத்தர், மனித உணவுக்கெனத் தகுதியானதென் அங்கீகரிக்கப்படாத அல்லது 5 ம் ஒழுங்கு விதியின் ஏற்பாட்டின்படி கொல்லுவது தடுக்கப்பட்ட எவ்விலங்கையும் கொல்ல அனுமதித்தல் கூடாது.

8. (1) 2 ம் ஒழுங்கு விதியில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரதும் பணிப்புரையின் பேரிலன்றி 6 ம் ஒழுங்கு விதியின் கீழ் மனித உணவுக்குத் தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ள இறைச்சி அல்லது கழிவிறைச்சி எதையும் கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தல் கூடாது.

(2) மனித உணவுக்கான எவ்விலங்கினதும் சடலத்தை, அச்சடலத்தின் முன்பாகத்திலும், பின்பாகத்திலும் கொல்களப் பொறுப்பு உத்தியோகத்தரால் ப. ப. ச என்னும் அடையாளமும் விடையத்திற்கேற்ப "மாட்டிறைச்சி" அல்லது "ஆட்டிறைச்சி" என்னும் சொற்களும் முத்திரை குத்தப்பட்டிருந்தாலன்றி கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தல்கூடாது.

9. ஒரு விலங்கை வேறு எந்த விலங்கினதும் முன்னிலையிலோ அல்லது அவ்வளவில் அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு விலங்கினதும் சடலம் அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்தப்படும்வரை கொல்லுதல் ஆகாது.

10. (1) இதில் இனிவரும் ஏற்பாட்டிற்கமைவாகக் கொல்களத்தை உபயோகிப்பதற்குக் கீழ்க் காணும் வீதங்களில் கட்டணம் விதிக்கப்படும்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒவ்வொரு கால் நடைக்கும் .. .. | 2 | 0 |
| ஒவ்வொரு செம்மறியாட்டுக்கும் அல்லது வெள்ளாட்டுக்கும் .. | 1 | 0 |

ஆனால் கொல்களத்திற்குக் கொண்டுவரப்படும் விலங்கெதுவும் கொல்லுதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் அல்லது கொல்லாது விலக்கப்பட்டால் அவ்விலங்கின் பொருட்டு விதிக்கப்படும் கட்டணம் ஆக 1.00 ரூபாவாக இருக்கும்.

(2) பந்தி 1 ன் கீழ் அவ்விலங்கின் பொருட்டுச் செலுத்தவேண்டிய உரிய கட்டணம் விசேட ஆணையாளருக்குச் செலுத்தப்பட்டு, அக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்று கொல்களக் காப்பாளருக்கேனும் அப்பற்றுச்சீட்டுக் காட்டப்படுவதற்கு விசேட ஆணையாளரால் எழுத்தில் நியமிக்கப்படும் வேறு உத்தியோகத்தர் எவருக்கேனும் அப்பற்றுச்சீட்டுக் காட்டப்பட்டாலன்றி கொல்களத்தில் எவ்விலங்கையும் கொல்லவோ அல்லது கொல்களத்திலிருந்து எவ்விலங்கையும் அப்புறப்படுத்தவோ கூடாது.

11. கொல்களக்காப்பாளர்—

(அ) கொல்களத்தில் கொல்லப்பட்ட எல்லாக் கால்நடைகளின் பதிவேடொன்றும் ;

(ஆ) எல்லா வெள்ளாடுகளினதும், செம்மறி ஆடுகளினதும் பதிவேடு ஒன்றும் வைத்திருத்தல் வேண்டும். இவ்வேடுகள் பொருளளவில் கீழ்க்காணும் படிவத்தில் இருத்தல் வேண்டும்—

மாட்டின் பற்றுச்சீட்டு இல் : ———.

வர்ணனை : ———.

நிறம் : ———.

வயது : ———.

குறிசுட்ட அடையாளம் : வலப்பக்கம் : ———.

இடப்பக்கம் : ———.

இறைச்சிக்காரர் பெயர் : ———.

தொழுவத்தில் வந்த நேரமும் திகதியும் : ———.

பரிசோதிக்கப்பட்ட திகதி : ———.

கொல்லப்பட்ட திகதி : ———.

கால் நடை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரின் முதல் எழுத்தொப்பம் : ———.

குறிப்புகள் : ———.

12. இவ்வொழுங்கு விதிகளில்—

" விசேட ஆணையாளர் " எனில் பண்டத்தரிப்பு பட்டணத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்காக பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 183 ம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட ஆணையாளர் எனப் பொருள்படும்.

" சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் " என்பது மானிப்பாய் சௌக்கிய உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

" கட்டளைச்சட்டம் " என்பது (272 ம் அத்தியாயமான) இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

7–1041—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

# பதவிகள் – வெற்றிடம்

## “இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை” யின் IV ஆம் பகுதியின் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. சேவை நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. நியமன விதிகள்.—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விலக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள் அநாதைகள், இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்குமேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள். 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சிமன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுவோர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளின்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் “புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்” தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—க. பொ. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1968 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் “புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்” என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். “இலங்கையர்” என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து பிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அதைக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

5. வேண்டற்பால ஒழுங்குகள்.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கோரக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகருக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் " விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் பின்காணும் பட்டயங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்திபெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(........) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

(ஆ) ............................பதவிக்கான விண்ணப்பம்

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.
தேசிய இனம் : ————.
(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதை கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் : ————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : —
————வருடங்கள் ————மாதங்கள் ————நாட்கள்.

(ஆ) பிறந்த திகதி :————. வருடம் :———— .
மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் : ————.
(ஆ) அவரது பிதா : ————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.
(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில்நுட்ப கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 ............ | ...... | ...... | 1. ............ | ...... | ...... |
| 2 ............ | ...... | ...... | 2. ............ | ...... | ...... |
| 3 ............ | ...... | ...... | 3. ............ | ...... | ...... |
| 4 ............ | ...... | ...... | 4. ............ | ...... | ...... |
| 5 ............ | ...... | ...... | 5. ............ | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் : ————.
2. தமிழ் : ————.
3. ஆங்கிலம் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள்

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக : —

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—

(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளை இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) : ————

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டசடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

## உள்ளூராட்சிச் சேவை

### பரிபாலன உதவியாளர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு :— வருடாந்தம் ரூ. 6,720—11 × 360—ரூ. 10,680.

3. **வேண்டிய தகைமைகள்.**—(1) ஒரு நன்கு மதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன் உள்ளூராட்சிச் சேவையில் செயலாளராக அல்லது எழுதுவினைஞராக பத்து வருட அனுபவம் உடையவராக விண்ணப்பதாரர் இருத்தல் வேண்டும். அல்லது

(2) 15.09.1973 ம் தேதியன்று வருடாந்தம் ரூ. 6,600 க்கு குறையாத நிலையான வருடாந்த வேதனத்தைப் பெறும் உள்ளூராட்சிச் சேவையில் செயலாளர் அல்லது எழுதுவினைஞர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாநகரக் கணக்குகளிலும், பரிபாலனத்திலும் அனுபவமும் அறிவும் பெற்றவர்களாக விண்ணப்பதாரர்கள் இருத்தல் வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள, உள்ளூராட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பியனுப்பப்பட வேண்டும். 15.09.1973—ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட அம்மாதிரிப் பத்திரத்தில் உள்ள 13 வது பந்திக்குப் பதிலாக, பின்வருவதைச் சேர்த்துக்கொள்ளவும் :—

"13" (அ) பரிபாலன அனுபவம் பற்றிய விவரங்கள்.
(ஆ) மாநகர கணக்குகளிலும் பரிபாலனத்திலும் அனுபவம் பற்றிய விபரங்கள்.

6. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் கிடைக்கப் பெற்றால், அவ்விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தம்மால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்று மாநகர சபை ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சிபார்சு செய்து சான்றுரைத்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படும். "பரிபாலன உதவியாளர்" என்ற சொல், கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விளக்கமாக எழுதப்பட வேண்டும்.

எட்கா பர்னாந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆடு யூலை மீ 16 ந உ.

7–955—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூராட்சிச் சேவை

தரம் II, கணக்குப் பதிவியலாளர்கள் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கு நியமனங்களின் பொருட்டு கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்களென இத்தால் அறியத்தரப்படுகிறது.

| | பெயர் | | முகவரி |
|---|---|---|---|
| (1) | எம். ஏ. ஆர். குசைன் | .. | 111/41, அப்துல் கமீட் மாவத்த, கொழும்பு 12 |
| (2) | எஸ். கொடிதுவக்கு | .. | இல. 8, நாஷனல் கௌசிங் ஸ்கீம், சிறிமால்வத்த, கணேபன்ன |
| (3) | பி. எம். விமலவன்ச | .. | " டயானி ", தொட்டமுன ரோட், தொறமுன, மாத்தற |
| (4) | பி. டி. டாலி | .. | 150, வண்டேசிவத்த, டிப்பேட, பாணந்துறை |
| (5) | டபிள்யு. ஜி. டயனந்த | .. | 33/7 சிறிசோறரா மாவத்த, கங்கோடவில்ல, நுகேகொட |
| (6) | எச். எம். விஜெயசிங்க | .. | 69/66 யூனிவேசிட்டி மாவத்த, றட்டனப்பிட்டிய, பொறலெஸ்கமுவ |
| (7) | பி. எச். விமலசேன | .. | காலவத்த, கொட்டகொட, ஸ்பிறிங்வலி |
| (8) | ரி. எம். பண்டா | .. | அலுத்கடற, புகுலொபொல, வெலிமட |
| (9) | எஸ். எம். பியசேன | .. | 142, பன்சல ரோட், மகறகம |
| (10) | டபிள்யூ. ஏ. ஆரியடச | .. | கல்கடுல்ல, கணேகொட |
| (11) | ட. ஜி. இன்டுசென | .. | 189, பகல பொமிறியா கடுவெல்ல |
| (12) | பி. ஏ. ஆர். லீலறட்ண | .. | " லீலவாசா ", மகோல |
| (13) | ஜி. ஏ. நந்தசிறி | .. | 34, ஒன்னந்தறே, கோறன ரோட், பிலியந்தல |
| (14) | எல். கே. கே. சோமறட்ண | .. | கலதுவேவ மேற்கு, துன்மொடற |
| (15) | கே. எம். பொடிபண்டா | .. | பிற்வல ரோட், கொடிகமுவ, பற்றம்பிட்டிய, றம்புக்க |
| (16) | கே. பத்மநாதன் | .. | பயிறிக்குமால், காரைநகர் |
| (17) | ஆர். டி. விக்கிரமநாயக | .. | நோனவிஸ்ரவா, உணுவற்றுன |
| (18) | பி. சின்னத்துரை | .. | கற்குவி வடக்கு, சாவகச்சேரி |
| (19) | எஸ். ஆர். எம். ஜயரட்ண | .. | நிட்டநாகம, கணணேவேவ |
| (20) | ஏ. டபிள்யு. எம். நியல் | .. | வெல்லிப்பிட்டிய, வெலிகம |
| (21) | எச். ஏ. ஏ. திசேற | .. | சென்ற் அன்தனிஸ் சேச், படகம வடக்கு, ஜாஎல |
| (22) | ஜி. ஏ. புத்ததாச | .. | " சுடம் ", அனுடுகோட, டிக்கும்புற |

இவர்களுக்கு உடனடியாக நியமனங்களைக் கொடுப்பதற்கு அதிகாரசபை கையேற்கவில்லை. பதவி வெற்றிடங்கள் வரும்பொழுதும், வந்தாலும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

எட்கா பரணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜுலை மீ 10 ந் உ.

7–860—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

# துணை விதிகள்

## நெல்லியடிப் பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அதிகாரமாம் பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் நெல்லியடிப் பட்டின சபையாலாக்கப்பட்டு அக் கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினுல் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூன் மீ 25 ந் உ.

துணைவிதிகள்

1. நெல்லியடிச் சந்தியிலிருந்து, யாழ்ப்பாணத் திசையாக 120 யார் தூரத்திற்குப் பருத்தித்துறை/யாழ்ப்பாண வீதியோரமாகவும் பருத்தித்துறைத் திசையாக 70 யார் தூரத்திற்கும் கொடிகாமம் வீதியோரமாக 60 யார் தூரத்திற்கும் அல்வாய் வீதியோரமாக 60 யார் தூரத்திற்கும் எவ்வாகனமும் நிற்பாட்டவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது.

2. ஓராம் பந்தியின் நியதிகளின்படி வாகனங்களை நிற்பாட்டுவதோ அல்லது நிறுத்தி வைப்பதோ தடைசெய்யப்பட்டிருக்குமிடத்து, பின்வரும் காரணங்களின் பொருட்டு அவசியமாகக் கூடிய அத்தகைய நேரத்திற்கேயன்றி ஒரு வாகனத்தின் சாரதி அவ்வாகனத்தை அசைவற்ற நிலையில் விட்டு வைத்தலாகாது.

(அ) அவ்வாகனத்திலிருந்து எவரையாவது இறங்க அல்லது அதனுள் ஏற்றவிடுதல் ; அல்லது

(ஆ) அவ்வாகனத்தினுள் பொருட்களை ஏற்றுதல் அல்லது அதிலிருந்து இறக்குதல் ; அல்லது

(இ) உத்தியோகத்தர் எவராலும் அல்லது அதிகார சபை எதனாலும் நிறுவப்பட்டிருக்கும் அல்லது காட்டப்பட்டிருக்கும் போக்குவரவுக்கான அடையாளர் அல்லது அறிவித்தலுக்குக் கீழ்ப்படிதல் ; அல்லது

(ஈ) அவ்வேளையில் போய்க்கொண்டிருக்கும் வாகன நடமாட்டத்தை உரிய முறைப்படி பின்தொடர்தல் ; அல்லது

(உ) அவ்வாகனத்தை நிறுத்தி வைப்பதற்காக நெல்லியடிப் பட்டின சபையால் வழங்கப்பட்ட ஒரு அதிகாரம் அல்லது அனுமதிப் பத்திரத்திற்குக் கீழ்ப்படிதல்.

3. இத்துணைவிதியின் 1 ம் பந்தியின் ஏற்பாடுகளை மீறி நடக்கும் ஒவ்வொருவரும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதமொன்றினுல் தண்டிக்கப்படற்பாலதாய் ஒரு தவறுக்கு ஆளாதல் வேண்டும்.

4. இத்துணைவிதிகளில்—

" சந்தி " என்பது யாழ்ப்பாணம்–பருத்தித்துறை வீதி, மற்றும் அல்வாய் கொடிகாமம் வீதி ஆகிய நான்கு வீதிகளும் சந்திக்கின்ற நெல்லியடிச் சந்தி எனப் பொருள்படும்.

" நிறுத்தி வைத்தல் " என்பது ஒரு வாகனத்தை அசைவற்ற நிலையில் வைத்து, மேற்சொல்லப்பட்டதல்லாத வேறு எக்காரணத்துக்காகவும் காலவரையறையின்றி அங்கு விட்டு வைத்திருத்தல் எனப் பொருள்படும்.

" வாகனம் " என்பது பைசிக்கிள்கள், திரிசைக்கிள்கள் உட்படவுள்ள சகல மோட்டார் வாகனங்களும், மாட்டு வண்டிகளும் அல்லது ஆட்களையோ அல்லது பொருட்களையோ ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படக்கூடிய எவ்வகையான செயற்கை உபாயம் ஏதேனும் எனப் பொருள்படும்.

7–986—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

**பலாங்கொடைப் பட்டினம்**

நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் பலாங்கொடைப் பட்டினத்தின் விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஜே. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 03 ந உ.

**துணைவிதி**

முறைச் சந்தைகள் சம்பந்தமாகப் பலாங்கொடை நகர சபையினால் ஆக்கப்பட்டு 03.04.1969 இன் 14,848 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

1. அத்துணைவிதிகளில் "ஞாயிற்றுக்கிழமை முறைச்சந்தை" என்னும் சொற்கள் வரும் இடங்களிலெல்லாம் "பலாங்கொடைப் பொது முறைச்சந்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

7–995—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம்**

1961 ன் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிற்ற கோறளை மெதபற்றுக் கிராமப்பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஆக்கப்பட்டு அப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஜே. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 12 ந உ.

**துணைவிதி**

**தோட்டிவேலை**

மலகூடவேலை, தோட்டிவேலை ஆகியவை சம்பந்தமாக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத் துணைவிதிகளின் 6 ஆம் பாகத்தின் 11 ஆவது துணைவிதியின் நோக்கத்துக்கு, சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படற்பாலதான தோட்டிவேலைக்கட்டணம் ஒவ்வொரு மனைத் தலம் சம்பந்தமாகவும் ஐம்பது சதங்களாகவிருத்தல் வேண்டும்.

7–931—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம்**

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள கொட்டாவைக் கிராமப் பிரதேசத்தை நிர்வகிக்கும் உத்தியோகத்தரினால் ஆக்கப்பட்டு அப் பிரிவின் 3 ஆம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஜே. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்.
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 12 ந உ.

ஆயுள்வேத மருந்துச்சாலைகள் சம்பந்தமான துணைவிதிகள்

ஆயுள்வேத மருந்துச்சாலைகள் சம்பந்தமாக காலி மாவட்டத்திலுள்ள கொட்டாவைக் கிராமப் பிரதேசத்தை நிர்வகிக்கும் உத்தியோகத்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 25.05.1973 இன் 61 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணைவிதிகளின் 40 ஆம் பாகம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :

(i) 40 ஆம் பாகத்திலுள்ள 4 ஆம் துணைவிதியை நீக்குவதன் மூலம் அத்துடன்

(ii) அதன்கண் பின்வரும் புதிய துணைவிதியை இடுவதன் மூலம் :

(4) ஆயுள்வேத மருந்துச்சாலையின் நிறுவனத்துக்காக செலவை இறுத்தற்கு சொல்லப்பட்ட மருந்துச்சாலையில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளரிடமிருந்தும் 75 சதங்களைக் கொண்ட கட்டணமொன்று அறவிடப்படல் வேண்டும்.

7–930—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

# நானாவித அறிவித்தல்கள்

**வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்தல்**

மட்டக்களப்பு நகரம்—வட்டாரங்கள் 1–19

**சோலைவரி— 1 ம் கந்தாயம்— 1973**

49 ம் இலக்க 02.03.73 ம் திகதிய, 53 ம் இலக்க 30.03.73 ம் திகதிய 60 ம் இலக்க 18.05.73 ம் திகதிய (4 வது பகுதி) இலங்கை வர்த்தமானப் பத்திரிகைகளின் சார்பாக, 1973 ம் ஆண்டிற்கான முதலாம் கந்தாயத்தின் சோலைவரிகளை செலுத்தும் கடைசித் திகதி மேலும் 31 ஜூலை 1973 வரை நீடிக்கப்பட்டிருக்கின்றதென்பதை வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. மேற் குறிப்பிட்ட திகதிக்குப் பிறகு செலுத்தப்படும் பணத்திற்கு கூடுதலாக 10 வீத விருந்துச் செலவு அறவிடப்படும்.

கே. பீ. குணரத்ன,
மாநகர ஆணையாளர்,
மட்டக்களப்பு.

மாநகர அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 12 ந உ.

7–885—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**நியமத் துணைவிதிகள் பற்றிய பொது அறிவித்தல்**

பனிக்கட்டிமுறிப்பு கிராமாட்சி மன்றம்

இத்தால் சகலரும் அறியவேண்டியது பனிக்கட்டிமுறிப்பு கிராமாட்சி மன்றம் அதன் நிருவாக எல்லைக்குள், 01.08.1973 முதல் கீழ்க் காணப்படும் நியமத் துணைவிதிகளை அமுல் நடாத்துதல் சார்பாக, 30.08.1973 இல் நடைபெறவிருக்கும் கிராமாட்சி மன்றக் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்பதை இத்தால் பொது மக்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

பொதுமக்களில் எவராவது, அல்லது பலர் ஒருமித்தாவது இந்த நியமத் துணைவிதிகள் அமுல் செய்யப்படுவதை ஆட்சேபிக்கவோ, அந்தத் துணைவிதிகள் சார்பாக ஏதாவது திருத்தங்கள் செய்யவோ உத்தேசித்தால், அதனையிட்டு 20.07.1973 ற்கு முன் இணைப்பிரதிகளில் வரையப்பட்ட எழுத்து மூலமான முறையீடுகளை எனக்குக் கிடைக்கத் தக்கதாக, நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் முறையீடுகள் எதையும் நான் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளவோ, அல்லது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவோ முடியாது என்றும் அறிவிக்கின்றேன்.

**அமுல்செய்யப்படவிருக்கும் நியமத்துணைவிதிகள்**

1. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 10,517, திகதி 10.04.1953 கொண்டதில் பிரசுரிக்கப்பட்டுள்ள :—நியமத் துணைவிதிகள் இலக்கம் 1 தொடக்கம் 37 ஈறாகவுள்ளவைகள்.

2. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 13,679 திகதி 21.06.1963 கொண்டதில் பிரசுரிக்கப்பட்டுள்ள :—நியமத் துணைவிதிகள் 38 ஆம் பாகத்தையும்.

3. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,703, திகதி 08.07.1966 கொண்டதில் பிரசுரிக்கப்பட்டுள்ள :—நியமத் துணைவிதிகள் 39 ஆம் 40 ஆம் 41 ஆம் பாகங்களையும்.

4. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 32, திகதி 03.11.1972 கொண்டதில் பிரசுரிக்கப்பட்டுள்ள :—நியமத் துணைவிதிகள் பாகம் 42 யும் ஆகியனவே.

சி. க. நடராசா,
தலைவர்,
கிராமாட்சி மன்றம்,
பனிக்கட்டிமுறிப்பு,
பன்குளம்.

கி. ம. காரியாலயம்,
பனிக்கட்டிமுறிப்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 10 ந் வ.

7—894—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

**உள்ளூராதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 261)**

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் கீழ் வவுனியா மாவட்டத்து கருநாவல்பற்று தெற்கு கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதிய 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 07 ஆம் திகதிய 10,560 ஆம் இலக்க வர்த்தமானியில் அது பற்றிப் பிரசுரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகள் 1 தொடக்கம் 37 பாகங்களையும் ;

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1963 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதிய 13,679 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1965 ஆம் ஆண்டு தை மாதம் 08 ஆம் திகதிய 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் அது பற்றிப் பிரசுரிக்கப்பட்டதுமான அதே நியமத் துணைவிதிகளின் 38 ஆம் பாகத்தையும் ;

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆம் திகதிய 14,703 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு தை மாதம் 03 ஆம் திகதிய 14,835 ஆம் இலக்க வர்த்தமானியில் அது பற்றிப் பிரசுரிக்கப்பட்டதுமான அதே நியமத் துணைவிதிகளின் 39, 40, 41 ஆம் பாகங்களையும் ;

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரால் வரையப்பட்டு 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதிய 15,001 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதே நியமத் துணைவிதிகளின் 18 ஆம் பாகத்துக்கான திருத்த விதி முழுவதையும் ;

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரால் வரையப்பட்டு 1972 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதிய 32 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதே நியமத் துணைவிதிகளின் 42 ஆம் பாகத்தையும் இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று கருநாவல் பற்று தெற்கு கிராம சபை உள்ளூரதிகாரத் தாபனங்கள் நியமத் துணைவிதிகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கிறது.

வே. கந்தசாமி,
தலைவர்,
கருநாவல்பற்று தெற்கு கிராம சபை

கிராம சபை அலுவலகம்,
ஒலுமடு, மாங்குளம்.

7—1042—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 29.6.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 6.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 13.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 20.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.